தினத்தந்தி

திருச்சியில் பரிதாபம்

# விஷவாயு தாக்கி 3 தொழிலாளர்கள் மூச்சு திணறி சாவு

## பாதாள சாக்கடை அடைப்பை சரிசெய்த போது பலியானார்கள்

ஸ்ரீரங்கம்,ஆக.13 - திருச்சி ஸ்ரீரங்கத்தில் பாதாள சாக்கடை அடைப்பை சரி செய்த போது விஷவாயு தாக்கி 3 தொழிலாளர்கள் பரிதாப மாக பலியானார்கள்.

### சாக்கடை அடைப்பு

திருச்சி – ஸ்ரீரங்கம் பாதாள சாக்கடை திட்டத்தின் கீழ் ஸ்ரீரங்கம் வீரேஷ்வரம் ரோடு பகுதியில் பாதாள சாக்கடை குழிகள் உள்ளது. இங்கு குழாய்கள் மூலம் சாக்கடை நீர் அருகில் உள்ள கழிவு நீர் மேலேற்று நிலையத்திற்கு கொண்டு செல்லப்படுகிறது. இந்த பகுதியில் ரோடுகள் இணையும் சந்திப்பு பகுதியில் சுமார் 20 அடி ஆழம் கொண்ட 3 சாக்கடை குழிகள் உள்ளன. இந்த சாக்கடை குழிகளில் அடைப்பு ஏற்பட்டு சாக்கடை நீர் தேங்கிவிட்டது.

சாக்கடை குழியில் ஏற்பட்ட அடைப்பை சரி செய்வதற்காக சென்னையைச் சேர்ந்த தனி யார் கட்டுமான நிறுவனத்தைச் சேர்ந்த ஒப்பந்த தொழி லாளர்கள் விராலிமலையைச் சேர்ந்த ராஜு (வயது 48), சமயபுரத்தைச் சேர்ந்த பாஸ்கர்(40),மண்ணச்சநல்லூர் அருகே உள்ள வாத்தலையைச் சேர்ந்த கனகராஜ் (38) ஆகிய 3 பேரும் வீரேஸ்வரம் பகுதிக்கு சென்றனர்.

### குழிக்குள் விழுந்தனர்

நேற்று மதியம் 2 மணி அளவில் அந்த பகுதியில் இருந்த சாக்கடை குழிகளின் மேல் மூடியை திறந்து சாக்கடை குழிக்குள் இறங்கி 3 பேரும் அடைப்பை சுத்தம் செய்யும் பணியில் ஈடுபட்டு இருந்தனர். சுமார் 1 மணி நேரம் மூன்று பேரும் சாக்கடை குழியில் இருந்த அடைப்பை சரி செய்தனர்.

பின்னர் கனகராஜும், பாஸ்கரும் அருகிலேயே குளித்து முடித்தனர். ராஜு வேலை முடிந்து கடைசியாக சாக்கடை குழியில் இருந்து மேலே வந்தார். சுத்தம் செய்த குழிக்குள் சாக்கடை தண்ணீர் தடையில்லாமல் போகிறதா என்று ராஜு குழிக்குள் எட்டிப் பார்த்ததார். அவர் எட்டிப் பார்த்த சில விநாடிகளில் மயக்கம் வந்து சாக்கடை குழிக்குள் தலை குப்புற கீழே விழுந்தார்.

ராஜு சாக்கடை குழிக்குள் தலை குப்புற கீழே விழுந்ததை பார்த்த பாஸ்கர் அவரை காப்பாற்ற முயன்றபோது அவரும் குழிக்குள்ளே விழுந் தார். குழிக்குள் விழுந்தவர்கள் அலறல் சத்தத்தை கேட்ட கனகராஜ் அவர்களை காப் பாற்ற ஓடினார். உள்ளே விழுந்தவர்களை காப்பாற்றும் முயற்சியில் அவரும் குழிக்குள் விழுந்தார்.

### தீயணைப்பு படையினர் விரைந்தனர்

அந்த சாக்கடை குழியில் விஷ வாயு உருவாகி இருந்துள்ளது. விஷ வாயு தான் முதலில் ராஜுவையும் அடுத்து அவரை காப்பாற்ற முயன்ற மற்ற 2 பேரையும் தாக்கி உள்ளது. பாதுகாப்பு உபகரணங்கள் எதுவும் இல்லாமல் அவர்கள் குழிக்குள் விழுந்ததால் அவர்களால் குழியில் இருந்து தப்பி மேலே வர முடியவில்லை. மேலும் சாக்கடை குழி மிகவும் குறுகியதாக இருந்ததாலும் ஒருவர் மேல் ஒருவர் விழுந்து கிடந்ததாலும் அவர்களால் தப்பித்து மேலே வர முடியவில்லை.

சாக்கடை குழிக்குள் 3 பேர் விழுந்ததை கண்ட அக்கம் பக்கத்தில் இருந்தவர்கள் இது குறித்து ஸ்ரீரங்கம் போலீஸ் நிலையம் மற்றும் தீயணைப்பு நிலையத்திற்கு தகவல் கொடுத் தனர். தகவல் அறிந்ததும் ஸ்ரீரங்கம் தீயணைப்பு படையினர் மற்றும் ஸ்ரீரங்கம் போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்றனர்.

### 3 பேர் பலி

தீ அணைப்பு படை வீரர்கள் பாதுகாப்பு உபகரணங்களை பொருத்திக்கொண்டு சாக் கடை குழிக்குள் இறங்கினர். பின்னர் உள்ளே மயங்கி விழுந்து கிடந்த கனகராஜ், பாஸ்கர், ராஜு ஆகிய மூன்று பேரையும் தூக்கி மேலே கொண்டு வந்தனர். மூன்று பேரும் உடனடியாக திருச்சி அரசு ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

இதில் பாஸ்கர், ராஜு ஆகிய இரண்டு பேரையும் பரிசோதித்து பார்த்த டாக் டர்கள், இருவரும் ஏற்கனவே இறந்துவிட்டதாக தெரிவித்த னர். கனகராஜ் உயிருக்கு ஆபத்தான நிலையில் தொடர்ந்துசிகிச்சை பெற்றார். ஆனால் சிறிது நேரத்தில் அவரும் பரிதாபமாக செத்தார்.

### விசாரணை

இந்த சம்பவம் பற்றி தகவல் அறிந்த மாநகர போலீஸ் துணை கமிஷனர் ராஜேந்திரன் சம்பவ இடத்திற்கு நேரில் சென்று விசாரணை நடத்தி னார். இது குறித்து ஸ்ரீரங்கம் போலீஸ் இன்ஸ்பெக்டர் பாலசந்தர் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறார். சாக்கடை குழிக் குள்விழுந்து 3 தொழிலாளர்கள் பலியான சம்பவம் திருச்சி யில் பெரும் பரபரப்பை ஏற் படுத்தியது.



திருச்சியில் 3 தொழிலாளர்கள் பலியாக காரணமாக இருந்த பாதாள சாக்கடை குழியை துணை போலீஸ் கமிஷனர் ராஜேந்திரன் பார்வையிட்ட போது எடுத்த படம்.



திருச்சியில் விஷ வாயு தாக்கி இறந்த ராஜூ, பாஸ்கரின் உடல்கள்.